பின்னால் இதுபோன்ற பிரச்சினை எழாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அளித்த பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அந்த மணல் மேடுகளை தற்காலிகமாக அகற்றுவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: ஏற்கெனவே அகற்றி இருக்கிறோம். அதற்கு இப்பொழுது நிரந்தரமான தீர்வு காண வேண்டும் என்று தான் இப்படிப்பட்ட முடிவு எடுத்து, Providing harsh holders என்ற அடிப்படையிலே கடின தளம் அமைத்து விட்டால், இனிமேல் மணல் மேடுகள் அந்தப் பகுதியிலே வராது என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தைப் போட்டிருக்கிறோம். விரைவிலே நிரந்தரமாக செய்தால் தான் பலனாக இருக்கும். ஆகவே நிரந்தரமாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணுகின்ற பணியை இந்த அரசு விரைவிலே தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அரசினர் சட்ட முன்வடிவு (ஆய்வு செய்தல்) நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தல்.

1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1995). மாண்புமிகு நிதி அமைச்சர்.

* **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1995) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

முற்பகல் 11.15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி இச்சட்டமுன்வடிவு விவாதம் இன்றி வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1995) நிறைவேற்றப்பெற வேண்டும்".
எனக் கோருகிறேன்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

5. வரவு-செலவுத் திட்டம், 1995-96, பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1995-96 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்-தொடர்ச்சி. இன்று முன்வரிசையில் உள்ள தலைவர்கள் அனைவரும் பேசவேண்டியிருக்கிறது. நாளையதினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய உரையும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய பதிலுரையும் மட்டும் இடம்பெறும். எனவே, எல்லாத் தலைவர்களும் இன்றைக்கே பேசி முடித்தாக வேண்டும். இருக்கின்ற நேரத்தின் அருமை கருதி மற்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் 10, 10 நிமிடம் கொடுத்திருந்தாலும், முன்வரிசைத் தலைவர்கள் என்ற முறையில் 15, 15 நிமிடம் ஒதுக்குகிறேன். குறுக்கீடுகள் இருந்தாலும் அந்தக் குறுக்கீடுகளும் பேசுகின்ற உறுப்பினர்களுடைய அந்த நேரத்திலேயேதான் கணக்கிடப்பட வேண்டி வரும். (குறுக்கீடு) அந்த அளவுக்கு நீங்கள் குறுக்கீடு இல்லாமல் பேசுவது உங்களுடைய திறமை. அதுதவிர ஆளும் கட்சியிலே இருந்து 3 உறுப்பினர்கள் பேசவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். எதிர்க் கட்சியிலேயிருந்தும் 2 அல்லது 3 உறுப்பினர்கள் பேசவேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். நேரத்தின் நிலைமையைக் கருத்திலே கொண்டுதான் அவர்களுக்கு நான் இடம் தர முடியும். எனவே, அவ்வாறு இடம் தர முடியவில்லை என்றாலும் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். திரு. உ. பலராமன்.

திரு. உ. பலராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1995-96 நிதிநிலை அறிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்காக பேரவைத் தலைவரும் காலதேவனுமாக இருக்கின்ற உங்களுக்கு என்னுடைய................ (குறுக்கீடுகள்)